பொருளியல்

பொருளாதரமொன்றின் மையப்பிரச்சினையை தர்க்கரீதியாக ஆய்வு செய்தல்



e தக்சலாவ கல்விக்கூடம் ™
The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa

தேர்ச்சி மட்டம் - 1.4

அருமை

வரையறையற்ற மனித விருப்பங்களுடன் ஒப்பிடும் இடத்து அதனை பூர்த்தி செய்வதற்கான கிடைப்பனவுகளின் பற்றாக்குறையே அருமையாகும். இதனை எல்லாப் பொருளாதாரங்களுக்கும் மையப் பிரச்சினையாக கருதப்படுவதற்கு காரணங்கள் ஆவன.

1. பொருளாதாரப் பிரச்சினைகள் அனைத்திற்க்கும் அருமை பொதுவானது
2. எந்தப் பொருளாதாரமும் எதை? எந்தளவு? எவ்வாறு? யாருக்காக? என்ற அடிப்படை பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டியிருப்பதனால் ஆகும்
3. எல்லாப் பொருளாதார சமூகங்களுக்கும் பொதுவானதாக இருப்பதனால் ஆகும்.

அருமை பிரச்சினை தோன்றக் காரணங்கள்

⇒ குறித்த சந்தர்பத்தில் மனித விருப்பங்கள் எல்லையற்று இருத்தல்.



⇒ அவற்றை நிறைவேற்ற தேவையான வளங்கள் பற்றாக்குறையாக இருத்தல்.

இவ்வருமைப் பிரச்சினையே பொருளியலில் தெரிவு என்ற மூலாதாரப் பிரச்சினைய உருவாக்குகின்றது. அதாவது அருமையானதும் மாற்றுப் பயன்பாடு உடையதுமான வளங்களில் இருந்து பயன்பாட்டை பெற முற்படும் போது ஏற்படும் பிரச்சினையாகும்.

இவ்வருமை என்பது ஒரு ஒப்பீட்டு பிரச்சினை ஆகும் (சார்பு)

இவ்வருமை என்பது எப்போதும் தீர்வு காணப்பட முடியாத பிரச்சினையாகும்

தெரிவுப் பிரச்சினை தோன்றுவதற்கு காரணங்கள்

⇒ வளங்களின் அருமை



⇒ வளங்களின் மாற்றுப் பயன்பாடு



தொகுப்பு : திரு.E.பிரபாகரன், ஆசிரியர் - பொருளியல், (யா/வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை, யாழ்ப்பாணம்)

கணினி வடிவமைப்பு : திரு.க.குகதாசன் ஆசிரியர் - க.கொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

அமையச்செலவு

மாற்றுப் பயன்பாடுகளுக்கிடையில் ஒரு மாற்றுத் தெரிவை மேற்கொண்டால் அதற்காக இழக்கப்படும் அடுத்தப்படியான சிறந்த தெரிவின் பெறுமதியாகும். இதனை பொருளியல் செலவு /மெய்ச் செலவு எனவும் அழைப்பர்.

⇒ இது பொருளாதாரப் பண்டங்களுக்கு நேர்கணியமாகும், இலவசப் பண்டங்களுக்கு பூச்சியமாகும்.

⇒ அமையச் செலவு என்பது நிதி ரீதியானது அல்ல மெய் ரீதியானது ஆகும்

⇒ நபருக்கு நபர் வேறுபடுகின்றது

⇒ அமையச் செலவில் வெளிவாரிச் செலவு உள்ளடங்காது

அமையச் செலவு பூச்சியமாகும் சந்தர்ப்பங்கள்

⇒ அருமை அற்ற வளங்களைப் பயன்படுத்தும் போது

⇒ மாற்றுப்பயன்பாடு அற்ற வளங்களைப் பயன்படுத்தும் போது

⇒ குறை தொழில் மட்ட பொருளாதார வளங்களைப் பயன்படுத்தும் போது உற்பத்திக்கான அமையச் செலவு

⇒ பொதுப் பண்டங்களை நுகரும் போது நுகர்விற்கான அமையச்செலவு





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு : திரு.E.பிரபாகரன், ஆசிரியர் - பொருளியல், (யா/வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை, யாழ்ப்பாணம்)

கணினி வடிவமைப்பு : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk